1972 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மாட்டுவண்டிகளுக்குப் பதிலாக மோட்டார் வாகனங்களை உபயோகப்படுத்தும் பெரிய அளவிலான ஒரு திட்டம் மாநகராட்சியின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

New protein-rich infant food.

*148 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that protein-rich infant food has been developed at the Institute of Rural Health and Family Planning at Gandhigram in Madurai district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) காந்தி கிராமத்தில் உள்ள கிராம நலம் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு நிறுவனம், வறுத்த கம்பு மாவு, வறுத்த பச்சை பருப்பு மாவு, வறுத்த கடலை பிண்ணுக்கு மாவு, மூன்றையும், வெல்லத்துடன் கலந்து வின்ஃபுட் (Warifood) என்ற பெயரில் குழந்தைகளுக்கான புதிய உணவு ஒன்றை கண்டு பிடித்திருக்கின்றது.

Physiotherapist Course

*149 Q.—THIRU D.S.A. SIVAPRAGASAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether applications were invited for admission to the Physiotherapist Course in the Madras Medical College this year?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்தப் பயிற்சிக்கான விண்ணப்பங்களுக்கு எந்தெந்தப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது? எவ்வளவு பேர்கள் விண்ணப்பம் செய்தார்கள்? எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 6—5—72 அன்றும், மெயில் பத்திரிகையில் 4—5—72 அன்றும், அரசாங்கத்தினுடைய தமிழரசு ஏட்டில் 15—5—72

அன்றும் விளம்பரம் செய்யப்பட்டது. 175 பேர்கள் விண்ணப்ப ஃபார்ம்களைப் பெற்றார்கள். 76 விண்ணப்பத் தாள்கள் இலாக்கா விற்குக் கிடைத்தன. 58 பேர்கள் அந்த விண்ணப்பதாரர்களில் தகுதி உடையவர்களாக இருந்தார்கள். 10 இடங்களுக்கு ஸ்டைபெண்டு உண்டு. அந்த 10 இடங்களுக்கு இந்த விண்ணப்பம் செய்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஊராட்சி ஒன்றியங்களில் செயற்கை முறை கருத்தரிப்பு வசதிகள்.

* 150 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 22—4—71-ல் நடந்த வடஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் செயற்கை முறையில் கால்நடைகள் கருத்தரிக்கும் வசதியை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தீர்மானித்து அரசை கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) செயற்கை முறை கருத்தரிப்பு வசதிகள், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும், உடனடியாக ஏற்பாடு செய்ய தற்போதுள்ள நிதி நிலைமையில் இயலவில்லை. என்றாலும், முன்னோடி மையக் கிராமத் திட்டங்கள் கால்நடை அபிவிருத்தி தீவிரத் திட்டங்கள், நகர்புறச் செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்கள் முதலியன செயலாற்றி வந்த இடங்களிலிருந்த செயற்கை முறை கருத்தரிப்பு வசதிகள் அனைத்தும் தொடர்ந்து செயலாற்றப் படுகின்றன. அவற்றின் அருகாமையில் உள்ள மருத்துவ மனை களுக்கும் இந்த வசதி, விந்து இருப்புச் சாதனங்கள் முதலியவற்றைப் பொறுத்து விரிவாக்கப் பெற்றுள்ளன. செயற்கை முறைக் கருவூட்டல் வசதி செய்து கொடுக்கப் பெறாத மருத்துவ மனைகள் சிலவற்றில், இயற்கை பொலிவுக்காக காளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவைகள் எந்த அளவிற்குப் பொது மக்களால் பயன் படுத்தப்படுகின்றன என்பது கவனிக்கப்பட்டு வருகின்றது. தேவைக் கேற்ப இவ் வசதிகள் விரிவாக்கப்படும். இந்த விவரங்கள் வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சியாளருக்கு வளர்ச்சி மன்றக் குழுவின் தகவலுக்காக தெரிவிக்கப்பட்டுள்ளது.